தினமணி

மீன் வளர்ப்பு செயல் விளக்கம்

First Published : 12 Jul 2012 01:45:25 PM IST

காரைக்கால், ஜூலை 11: மீன் வளர்க்கும் ஆர்வத்தைப் பெருக்கும் வகையில் பள்ளி மாணவர்களுக்கு மீன் வளர்ப்புப் பண்ணையில் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

காரைக்கால் மாவட்டம், கருக்களாச்சேரியில் மத்திய அரசு நிறுவனமான ராஜிவ்காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்தில் மீன் வளர்ப்பு பல்வேறு தரப்பினருக்கும் பயிற்சியளிக்கப்படுகிறது.

இதன் ஒருகட்டமாக காரைக்காலில் பள்ளி மாணவர்களுக்கு நேரடி செயல்விளக்கப் பயிற்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் காரைக்கால் கே.எம்.கே. உயர்நிலைப் பள்ளியிலிருந்து 3 மற்றும் 9-ம் வகுப்பு மாணவர்கள் சுமார் 60 பேர் கலந்துகொண்டனர்.

"வளரும் இளம் சிறார்களுக்கு இந்தப் பயிற்சி பயனுள்ளதாக அமையும். அவர்களிடையே மீன் வளர்க்கும் ஆர்வத்தை இந்தச் செயல்விளக்கம் ஏற்படுத்தும்' என்றார் மீன்வளர்ப்புப் பண்ணையின் திட்ட மேலாளர் கணேஷ்.

உணவு உற்பத்தியில் கவனம் செலுத்தவில்லை: காரைக்கால் விவசாயிகள் புகார்

First Published : 12 Jul 2012 01:01:06 PM IST

காரைக்கால், ஜூலை 11: உணவு உற்பத்திப் பெருக்கத்தில் புதுச்சேரி அரசு கவனம் செலுத்தவில்லை என காரைக்காலில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார் கூறினர்.

கூட்டத்துக்கு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் ஜெ. அசோக்குமார் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்த கருத்து:

காரைக்கால் மாவட்டத்தில் வடிகால் முறை முற்றிலும் பாதிக்கப்பட்டுவிட்டது. இப்போது காவிரித் தண்ணீர் வந்தால்கூட பல பகுதிகள் மூழ்கும் அபாயம் இருக்கிறது. வடிகால் சீரமைப்பில் மாவட்ட நிர்வாகம் சிறப்புத் திட்டம் வகுத்துச் செயல்பட வேண்டும்.

வாஞ்சியாறு பாலம் வழியே ஏற்கெனவே தண்ணீர் வடிவது சிரமமான நிலையில், வலுப்படுத்தும் நோக்கில் பாலத்தின் உள்பகுதியின் அளவைக் குறைத்துவிட்டது பொதுப்பணித் துறை. இதனால்

பாதிப்பே அதிகரிக்கும். காரைக்காலில் 400 குளங்கள் உள்ளன. இவற்றுக்கு பாய்கால்,வடிகால் முறைப்படுத்த வேண்டும்.

5 ஏரிகள் வெட்டுவதான அறிவிப்பு நடைமுறைக்கு வரவில்லை.

இவை செயல்பாட்டுக்கு வரவில்லையெனில் அடுத்த 10 ஆண்டுகளில் காரைக்காலில் குடிநீர் பஞ்சம் ஏற்படும். இப்போதே 50 சத தரக்குறைவில்தான் குடிநீர் கிடைக்கிறது.

கல்லணை கமிட்டியில் காரைக்காலைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி நியமிக்க ஆட்சியர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காரைக்கால் வேளாண்துறையில் அறுவடை இயந்திரம் கூடுதலாக இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விளைநிலம் குறைந்து வருகிறது. புதுச்சேரி அரசு உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு கவனம் செலுத்தவே இல்லை என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தினர்.

நிறைவில் மாவட்ட ஆட்சியர் ஜெ. அசோக்குமார் பேசியது:

பழுதான ஆழ்குழாய்க் கிணறுகளை ஒரு வாரத்தில் சீரமைக்க பாசிக் நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நிகழாண்டு மார்கெட்டிங் சொசைட்டி மூலம் நெல் கொள்முதல் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

காரைக்காலுக்குரிய 6 டி.எம்.சி. காவிரித் தண்ணீர் கிடைக்க மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. வாய்க்கால், குளம் தூர்வாரப்படுவதில் பொதுப்பணித்துறை, வட்டார வளர்ச்சித் துறை எது ஈடுபடவேண்டுமென்பதை முன்னதாகவே விவசாயிகள் தெரிவிக்க வேண்டும். அறுவடை இயந்திரங்கள் பழுதாகியிருப்பது உடனடியாகச் சீரமைக்கப்பட வேண்டும். குறையுள்ள பகுதிகளை நேரில் ஆய்வு செய்து படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள் தெரிவித்த குறைகளை அந்தந்தத் துறையினர் விரைந்து நடவடிக்கை எடுத்து அறிக்கை தர வேண்டும் என்றார் ஆட்சியர்.

கூட்டத்தில் கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர்கள் கலைமாறன், ராஜசேகரன் உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## பயிர்க் காப்பீடு பங்குத் தொகை: மார்க்சிஸ்ட் கோரிக்கை

First Published : 13 Jul 2012 12:00:00 AM IST

சென்னை, ஜூலை 12: பயிர்க் காப்பீட்டுக்கான தமிழக அரசின் பங்குத் தொகையான ரூ. 73 கோடியை உடனே செலுத்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கொறடா கே. பாலகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து தமிழக அரசின் வேளாண்மைத் துறைச் செயலாளருக்கு அவர் வியாழக்கிழமை அனுப்பிய கடிதத்தில் கூறியிருப்பது:
தமிழகம் முழுவதும் 2010-11-ம் ஆண்டு பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை. தமிழக அரசின் பங்குத் தொகை ரூ.73 கோடி செலுத்தப்படாததால்தான் காப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை என்று தெரிகிறது.
இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற நடைமுறைகளால் பயிர்க் காப்பீடு மீதே விவசாயிகள் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.
எனவே, 2010-11-ம் ஆண்டுக்கான தமிழக அரசின் பங்குத் தொகையை உடனே செலுத்தி விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாலகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## வீரிய ஒட்டு மக்காச்சோள சாகுபடி

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2012,01:10 IST

மறைமலை நகர்:"தினமலர்' செய்தியைத் தொடர்ந்து, நெல்லுக்கு மாற்றுப் பயிராக, வீரிய ஒட்டு மக்காச்சோளம் பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டுவதால், காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மையத்தில், வரும் 18ம் தேதி, வீரிய ஒட்டு மக்காச்சோள சாகுபடி தொழில் நுட்பம் குறித்த சிறப்பு இலவச பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.நெல்லுக்கு மாற்றுப் பயிராக, வீரிய ஒட்டு மக்காச்சோளம் பயிரிடுவதன் மூலம், விவசாயிகள் அதிக லாபம் பெறுவது குறித்து, கடந்த மாதம் 19ம் தேதி, "தினமலர்' நாளிதழில் படத்துடன் செய்தி வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து, திருவண்ணாமலை, திருவாரூர், விழுப்புரம், திருவள்ளூர், கடலூர், காஞ்சிபுரம் உட்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், வீரிய ஒட்டு மக்காச்சோளம் பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர்.
அவர்களுக்காக, காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மையத்தில், வரும் 18ம் தேதி, வீரிய ஒட்டு மக்காச்சோள சாகுபடி தொழில்நுட்பம்' குறித்த இலவச சிறப்பு பயிற்சி நடைபெறுகிறது. இதில்

விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம், என வேளாண் அறிவியல் மையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோடை மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஜுலை 13,2012,01:46 IST

கருத்தை பதிவு செய்ய

திருக்கோவிலூர் : கடந்த இரண்டு நாட்களாக பெய்துவரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோடைமழை பொய்த்ததால் இந்த ஆண்டு விவசாயம் பெருமளவில் பாதித்துள்ளது. குறிப்பாக மானாவாரி சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்தனர். குறைந்த அளவில் பயிர் செய்யப் பட்டுள்ள கம்பு பயிரும் மழையின்றி கருகத் துவங்கியது.

இந்நிலையில் நிலத்தடி நீரை நம்பி கரும்பு பயிர்செய்த விவசாயிகள் மின்சாரம் இன்றி அவதிப்பட்ட நாட்கள் மாறி, தற்போது நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து கிணற் றில் தண்ணீர் இன்றி தவிக்கும் காலமாக மாறியது.

இந்நிலையில் கடந்த மூன்று நாட்களாக திருக்கோவிலூர் உள்ளிட்ட கிராம பகுதிகளில் பரவலாக பெய்து வரும் மழை விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. குறிப்பாக மானாவாரியில் கம்பு பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதேபோல் தண்ணீர் இன்றி காயத்துவங்கிய கரும்பு உள்ளிட்ட பணப்பயிர்களுக்கும் இந்த மழை போதுமானதாக இருப்பதால் விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர்.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 285 காசாக நிர்ணயம்

பதிவு செய்த நாள் : ஜுலை 13,2012,01:40 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 285 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலையில் தொடர் சரிவு ஏற்பட்டு வருவது, கோழிப்பண்ணையாளர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 300 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 15 காசுகள் குறைத்து, 285 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒரு வார காலமாக, முட்டை விலையில் தொடர் சரிவு ஏற்பட்டு

வருவது, கோழிப்பண்ணையாளர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது.
நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்:
சென்னை, 310 காசுகள், பெங்களூரு, 300 காசுகள், மைசூரு, 297 காசுகள், ஹைதராபாத், 275 காசுகள், மும்பை, 307 காசுகள், விஜயவாடா, 275 காசுகள், கோல்கத்தா, 302 காசுகள், பார்வாலா, 260 காசுகள், டில்லி, 275 காசுகள்.
இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 38 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 60 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,000 வழங்க விவசாய சங்க கூட்டமைப்பு கோரிக்கை

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2012,01:38 IST

நாமக்கல்: "உயர்ந்து வரும் சாகுபடி செலவை கருத்தில் கொண்டு, நடப்பு அரவை பருவத்துக்கு வெட்டுக் கூலி, வண்டி வாடகை இல்லாமல், கரும்பு டன் ஒன்றுக்கு, 3,000 ரூபாய், வயல் கொள்முதல் விலையாக வழங்க வேண்டும்' என,இந்திய விவசாய சங்கங்கள் கூட்டமைப்பின் (சிஃபா) தொழில்நுட்ப செயலாளர் அஜிதன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
நாட்டின் எதிர்கால நீர்த் தேவையை கருத்தில் கொண்டு, இந்தியா முழுவதும் உள்ள நதிகளை இணைத்து, தேசியமயமாக்க, விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.
மேலும், நதி நீர் மாசுபடுவதை தவிர்க்க, சட்டங்களை கடுமையாக்க வேண்டும்.
காவிரி, முல்லை பெரியாறு, பாலாறு, தென்பெண்ணை ஆறு ஆகிய நதிகளில் அண்டை மாநிலங்கள் தடுப்பணை கட்ட திட்டமிடுதலை, சட்டம் இயற்றி, தடுத்து நிறுத்த வேண்டும்.
கீழ்பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க, மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
உயர்ந்து வரும் சாகுபடி செலவை கருத்தில் கொண்டு, நடப்பு அரவை பருவத்துக்கு வெட்டுக் கூலி, வண்டி வாடகை இல்லாமல், கரும்பு டன் ஒன்றுக்கு, 3,000 ரூபாய், வயல் கொள்முதல் விலையாக வழங்க, மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
தற்போது, அரசு அறிவித்துள்ள கொள்முதல் விலையான, குவிண்டால் ஒன்றுக்கு, 1,250 ரூபாய் நெல் சாகுபடி செலவுகளை கணக்கிடும்போது கட்டுபடியாகாது. எனவே, நெல் குவிண்டால் ஒன்றுக்கு, 2,000 ரூபாய் கொள்முதல் விலையாக அறிவித்து, நெல் சாகுபடியாளர்களை நலிவில்

இருந்து மீட்க வேண்டும்.
உரவிலை, நாளுக்கு நாள் மாறுபடுவதால், சாகுபடி செலவையும், கடன் தொகையையும் நிர்ணயிக்க முடியாத நிலை உள்ளது. சீரான உர வினியோகம், தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தை, வேளாண்மையுடன் இணைத்து உற்பத்தி பெருக்கத்துக்கு பயன்படுத்த, மத்திய அரசு வழிவகை செய்ய வேண்டும்.

## வேளாண் நிலையத்தில் காளான் உற்பத்தி பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2012,01:37 IST

நாமக்கல்: "வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 17ம் தேதி, காளான் உற்பத்தி குறித்த பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:
நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 17ம் தேதி, அசோலா மற்றும் காளான் உற்பத்தி குறித்து ஒரு நாள் இலவச செயல் விளக்க பயிற்சி முகாம் நடக்க உள்ளது. பயிற்சியில், அசோலா ரகங்கள், உற்பத்தி முறை, வளரிடம், அசோலாவில் உள்ள சத்து, கால்நடை மற்றும் கோழித் தீவனமாக அளிக்கும் முறை குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
விவசாயிகள் உட்பட ஆர்வமுள்ள அனைவரும் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்பும் நபர்கள், வரும் வரும் 16ம் தேதிக்குள், மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரிலோ அல்லது 04286-266650, 266345, 266244 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாய்க்காலில் தண்ணீர் வரத்து குறைவு

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2012,01:37 IST

ப.வேலூர்: கொமாரபாளையம் கடைமடை ஆயக்கட்டு விவசாயிகள் மற்றும் கொடிக்கால், கரும்பு, வாழை, வெற்றிலை விவசாயிகள் சார்பில், ப.வேலூர் அடுத்த பாலப்பட்டியில், உண்ணாவிரத போராட்டம் நடந்தது.
கொடிக்கால் விவசாயிகள் சங்கத் தலைவர் முத்துசாமி தலைமை வகித்தார். போராட்டத்தில், 1988 அக்டோபர் 3ம் தேதி வெளியிடப்பட்ட அரசு உத்தரவின்படி, அனைத்து பம்ப் செட்டின் மின்

இணைப்பையும் துண்டிக்க வேண்டும். பாலப்பட்டி சஸ்தா பாலத்தின், 0.40 பாயிண்ட் நிரந்தரமாக தண்ணீர் வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.
கொமாரபாளையம் வாய்க்காலுக்கு சம்பந்தப்பட்ட வெங்கரை போக்கை இணைத்து, அங்கு வீணாகும் தண்ணீரை, எங்கள் வாய்க்காலுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.
தற்போது, தண்ணீர் இல்லாமல் காய்ந்துபோன வெற்றிலை கொடிக்கால், கோரை, கரும்பு பயிர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்.
ராஜா, கொமாரபாளையம் வாய்க்காலில், அனைத்து நீரூற்று பாசன பம்ப் செட்டுகள் இயங்குவதால், கடைமடை பகுதி விவசாயிகளுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதனால், உடனடியாக பம்ப் செட் இணைப்பை ரத்து செய்து, ஆயக்கட்டு விவசாயத்துக்கு தண்ணீர் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது.
தகவல் அறிந்த பொதுப்பணித்துறை சரபங்கா கோட்ட செயற்பொறியாளர் செல்வராஜ், இளம் பொறியாளர் தர்மலிங்கம் ஆகியோர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, "இன்று (நேற்று) இரவுக்குள் கடைமடை வரை தண்ணீர் வந்துசேர நடவடிக்கை எடுக்கப்படும்' என, உறுதி அளித்ததை தொடர்ந்து, உண்ணாவிரத போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.
* உண்ணாவிரத போராட்டத்தில், மகாத்மாகாந்தி வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் பணியாற்றும் பெண்கள் சிலர் பங்கேற்றனர். அவர்களை, பஞ்சாயத்து ஊழியர்கள் வந்து எச்சரித்ததை தொடர்ந்து, உண்ணாவிரத போராட்டத்தில் இருந்து பாதியில் எழுந்து சென்றனர்.

## ஆந்திர அரிசி வராததால் விலை உயர்வு!

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2012,01:51 IST

ஈரோடு: ""ஆந்திராவில் இருந்து, 1,500 டன் நெல் மற்றும் அரிசி வரத்து நின்று போனதால், தமிழகத்தில் அரிசி விலை உயர்ந்துள்ளது,'' என, ஈரோடு மாவட்ட ரைஸ்மில் உரிமையாளர் சங்க பொருளாளர் கந்தசாமி கூறினார்.
தமிழகத்தில் மார்ச் மாதம் துவங்கி, அரிசி விலை உயர்ந்து வருகிறது. வெளி மார்க்கெட்டில், 25 கிலோ மூட்டைக்கு சராசரியாக, 200 ரூபாய் முதல் 400 ரூபாய் விலை உயர்ந்துள்ளது. மின் கட்டணம், டீஸல் விலை உயர்வாலும், ரைஸ் மில் உரிமையாளர்கள் அரிசியை பதுக்கி வைத்திருப்பதாலும், அரிசி விலை உயர்வதாக கருதப்பட்டது.
இதுபற்றி, ஈரோடு மாவட்ட ரைஸ்மில் உரிமையாளர் சங்க பொருளார் கந்தசாமி கூறியதாவது: தமிழகத்தில் கடந்தாண்டு நல்ல மழை பெய்ததால், நெல் உற்பத்தி அதிகரித்தது. அறுவடையின் போது, ஐ.ஆர்., 20, கோ 43, ஏ.டி.டி., 39 மற்றும் இட்லி கார் ரக நெல்லை, கிலோ, 11.50

ரூபாய்க்கு அரசு கொள்முதல் செய்தது.
சன்ன ரக நெல்லை தனியார் ரைஸ் மில்லும், கர்நாடகா டும்கூர் வியாபாரிகளும் கிலோ, 14.50 பைசாவுக்கு வாங்கினர். முந்தைய ஆண்டுகளில் அறுவடையின் போது கூடுதலாக நெல் வாங்கி வைத்ததால், அரிசி விலை சரிவடைந்தது. இதனால், டும்கூர் வியாபாரிகள், கூடுதல் நெல் முழுவதையும் கொள்முதல் செய்து கொண்டு சென்றனர்.
டிசம்பர் மாதத்துக்கு பின் மழை குறைந்தது. ஏழு மாதங்களாக கடுமையான வெயிலும், நீர் நிலைகளில் தண்ணீர் வற்றியதால், நடப்பாண்டு டெல்டா பகுதியிலும், ஈரோடு, சேலம் உள்ளிட்ட பிற மாவட்டங்களிலும் நெல் பயிராகவில்லை.
ஒவ்வொரு ஆண்டும் நெல் பயிரிடும் போது, விவசாயிகள் கையிருப்பு நெல்லை விற்பது வழக்கம். நடப்பாண்டு மழை, தண்ணீர் இல்லாமல் போனதால், விவசாயிகள் கையிருப்பு நெல்லை விற்கவில்லை. மேலும், சிலர் கூடுதல் விலைக்காக காத்திருக்கின்றனர். நெல் கிடைக்காததால், ரைஸ் மில்கள் பூட்டப்பட்டு வருகின்றன. மழை பெய்தால் மட்டுமே, நெல் விற்பனைக்கு வரும், அரிசியின் விலையும் குறையும்.
ஆந்திராவில் விளையும், "பாபட்லா பொன்னி' வகை நெல் மற்றும் அரிசி, நாள் ஒன்றுக்கு 1,500 டன், சென்னைக்கு விற்பனைக்கு வருவது வழக்கம். கடந்த மூன்று மாதமாக ஆந்திரா நெல் மற்றும் அரிசி வரத்து நின்று போனது. அங்கும் மழை இல்லை. கூடுதல் விலை கிடைப்பதால், ஆந்திரா அரசு, வெளிமாநில விற்பனையை நிறுத்திவிட்டது. தமிழகத்தின் அரிசி தேவை, இன்று கர்நாடகா மாநிலம் டும்கூர் வியாபாரிகளை எதிர்பார்த்தே உள்ளது. ஈரோட்டை பொறுத்தமட்டில், விலை கட்டுப்பாட்டில் உள்ளது.
கர்நாடகா டீலக்ஸ் பொன்னி, 75 கிலோ மூட்டை, 2,800 ரூபாய், பி.பி.டி., 2,600, ஏ.டி.டி-45, 2,000, ஐ.ஆர்.,20, 2,100, அதிசய பொன்னி, 2,300, இட்லி கார், 2,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கடந்த மாதம் மார்க்கெட்டுக்கு மூன்று டன் வரை விற்பனைக்கு வந்தது. தற்போது, ஒன்றரை டன் மட்டும் வந்துள்ளது. விற்பனையும், 30 சதவீதம் குறைந்துள்ளது. வெளி மார்க்கெட்டில் அரிசி விலை உயர்ந்துள்ளதால், ரேஷன் அரிசியை வாங்கி விற்காமல், மக்கள் பயன்படுத்த துவங்கியுள்ளனர், என்றார்.

## ரூ. 55 லட்சம் பருத்தி சத்தியில் விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2012,01:51 IST

சத்தியமங்கலம்: சத்தியமங்கலத்தில் நடந்த பருத்தி ஏலத்தில் ரூ. 55 லட்சத்திற்கு பருத்தி விற்பனையானது.சத்தி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் செவ்வாயன்று பருத்தி ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் விவசாயிகளுக்கு போதிய விலை

கிடைக்கவில்லை என கூறி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தாசில்தார் மகேஸ்வரன், பவானிசாகர் எம்.எல்.ஏ., சுந்தரம் மற்றும் சங்க தனி அதிகாரி இளங்கோவன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நேற்று மீண்டும் ஏலம் நடத்தப்பட்டது. கூடுதலாக ஆறு வியாபாரிகள் வந்தனர். 1,200 குவிண்டால் பருத்தி விற்பனைக்கு வந்தது. ஒரு கிலோ பருத்தி, 43 முதல், 47.30 ரூபாய் வரை விற்பனையானது. மொத்தம், 55 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம்போனது.

**மழை குறைவால் மாற்றம் மக்காச்சோளம் சாகுபடி தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2012,01:50 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் மழை பெய்வதற்கான அறிகுறி குறைந்ததால், நீர் அதிகம் தேவைப்படாத மக்காச்சோளம் சாகுபடிக்கு விவசாயிகள் மாறியுள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில், 9,900 ஹெக்டேர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடியாகிறது. மக்காச்சோளம், 88 ஆயிரத்து 234 மெட்ரிக் டன் விளைச்சல் இருக்கும். பொதுவாக கோழி தீவனம் தயாரிக்க அதிகளவில் தேவைப்படுகிறது. குவிண்டால், 750 ரூபாயில் இருந்து சில ஆண்டாக படிப்படியாக உயர்ந்து, தற்போது, 1,200 ரூபாய் வரை மக்காச்சோளம் விற்கிறது. இப்பயிர், 110 நாளில் விளைந்து விடுவதாலும், அதிகளவில் நீர் தேவையில்லாததாலும், ஓரளவு கட்டுப்படியான விலை கிடைக்கிறது என்பதாலும் பல விவசாயிகள் ஆர்வத்தோடு சாகுபடி செய்கின்றனர்.

வேளாண் அதிகாரிகள் கூறுகையில், ""குறைவான நீர் இருந்தாலே போதுமானது. ஆண்டுக்கு மூன்று முறை சாகுபடி செய்யலாம். 110 நாளில் முழு வளர்ச்சியடைந்து விடும். நடப்பு ஆண்டு, 500 ஹெக்டேருக்கு மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழை பெய்யாததால், சாகுபடி பரப்பு அதிகரிக்கலாம்," என்றனர்.

**மண் பரிசோதனை செய்து லாபமடையலாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2012,02:46 IST

கருத்தை பதிவு செய்ய

ஊட்டி:நீலகிரி மாவட்ட விவசாயிகள் மண் பரிசோதனை செய்து, அதிக லாபம் அடைய தோட்டக்கலை துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.நீலகிரி தோட்டக்கலை இணை இயக்குனர் மோகன் கூறியதாவது:மாநில முதல்வர் அறிவித்த இரண்டாம் பசுமை புரட்சி திட்டத்தின் கீழ், பயிர் மகசூலை இரட்டிப்பாக்கி விவசாயிகளின் பண்ணை வருமானத்தை அதிகரிக்க, அனைத்து விவசாயிகளும் ஒவ்வொரு பருவத்திலும் பயிர் நடவிற்கு முன், மண் பரிசோதனை செய்து மண்

ஆய்வு முடிவின்படி உரமிட்டால் விளைச்சல் பெருகி அதிக லாபம் பெறலாம்.மண்ணில் பயிருக்கு கிடைக்கக் கூடிய சத்துக்களின் நிலை அறிந்து தேவையான சத்துக்களை சமச்சீர் முறையில் உரமிடலாம். இதன் காரணமாக உரச் செலவை குறைத்து மண் வளத்தை பெருக்கலாம். மண்ணின் கார அமில நிலையை சரி செய்து, மண்ணிற்கு ஏற்ப பயிர்செய்து உரத்தின் முழு பயனை அடையலாம்.ஒவ்வொரு தோட்டத்திற்கும், ஒவ்வொரு பயிருக்கும் ஒரு மண்மாதிரி எடுக்க வேண்டும். பயிர் அறுவடைக்கு பின்னும், அடுத்த பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பும், உரமிடுவதற்கு முன்பும் மண் மாதிரி எடுக்கலாம். உரம் இட்ட பூமியாக இருந்தால் மூன்று மாதம் கழித்து மண் மாதிரி சேகரிக்க வேண்டும்.

தொடர்ந்து நிழல் உள்ள பகுதியிலிருந்தும், நீர் பாங்கான பகுதியிலிருந்தும் மண் மாதிரி எடுக்க கூடாது. அதே போன்று எருகுவித்த இடங்களில் இருந்தும் மண்மாதிரி எடுக்கக் கூடாது.ஆண்டு பயிர்களான உருளைக்கிழங்கு மற்றும் அனைத்து காய்கறி பயிர்களுக்கும் 9 அங்குல ஆழம் வரை "வி' வடிவம் வருமாறு குழிவெட்டி மண்ணை அப்புறப்படுத்த வேண்டும். வெட்டிய "வி' வடிவ குழாயின் ஓரமாக மண் வெட்டியின் தகட்டால் மேலிருந்து குழியின் முழு ஆழத்திற்கு ஒரே சீராக ஒரு அங்குல கனத்தில் மண்ணை வெட்டி எடுக்க வேண்டும்.இதுபோன்று ஏக்கருக்கு 10 இடங்களில் வெட்டி எடுத்த மண்ணை சேகரித்து ஒரு பேப்பரில் வட்டமாக கொட்டி கையால் 4 பாகமாக பிரித்து அதில் எதிர்,எதிர் புறமாக உள்ள இரண்டு பாகத்தையும் கழிக்க வேண்டும். மீதமுள்ள மண்ணை மீண்டும் கலக்கி நான்கு பாகமாக பிரித்து 2 பாகத்தை கழிக்க வேண்டும்.இது போன்று பல முறை செய்து அரை கிலோ மண் கிடைக்கும் வரை செய்ய வேண்டும். இவ்வாறு சேகரித்த அரை கிலோ மண்ணைபாலிதீன் பைகளில் போட்டு விவரத்தாள் இணைக்க வேண்டும். விவரத்தாளில் பெயர் மற்றும் முகவரி, சர்வே எண் தோட்டத்தில் பயிரிட்ட முன்பயிர் உத்தேசித்துள்ள பயிர் போன்றவற்றை குறிப்பிட வேண்டும்.தேயிலை, காபி போன்றவையாக இருந்தால் ஏக்கருக்கு 10 இடங்களில் முக்கால் அடி ஆழத்தில் குழி எடுத்து மண்ணை அகற்ற வேண்டும். பின் குழியில் மேலிருந்து கீழ் வரை மண்ணை ஒரு அங்குல கனத்தில் மண்ணை சரித்து ஒரு பிளாஸ்டிக் பேசினில் சேகரிக்க வேண்டும். இதுபோன்று 10 இடங்களில் சேகரித்து காய்கறி பயிருக்கு எடுத்தது போன்று நான்காக பிரித்து இரண்டு பாகத்தை அகற்றி இறுதியில் அரை கிலோ மண் கிடைத்தவுடன் விவரத்தாளில், பெயர், முகவரி, சர்வே எண், மேல்மண் என குறிப்பிட வேண்டும்.பேரூட்ட சத்துக்களான தழை, மணி மற்றம் சாம்பல் சத்து, உப்பின் நிலை மற்றும் கார அமில நிலை அறிய ஆய்வுகட்டணமாக 10 ரூபாய் செலுத்த வேண்டும்; நுண்ணூட்ட சத்துக்களான இரும்பு, மாங்கனீசு, துத்தநாகம் மற்றும் தாமிர சத்துக்களின் அளவறிய 10 ரூபாய் செலுத்த வேண்டும்; சேகரித்த மண்ணை ஆய்வு செய்ய ஊட்டி அரசு ரோஜா பூங்கா அருகில் உள்ள மண் ஆய்வு கூடத்தை அணுகி விபரங்களை பெறலாம்.தற்போது மண் பரிசோதனை செய்ய ஒவ்வொரு விவசாயிக்கும் ஒருங்கிணைந்த விவசாய கையேடு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், அந்தந்த பகுதி தோட்டக்கலை துறை ளோண்மை உதவி அலுவலர்

அல்லது தோட்டக்கலை அலுவலரை அணுகி விவசாயியின் அடிப்படை விபரங்களை தெரிவித்து விவசாயின் அடையாள எண் பெற்று மண் மாதிரிகளை ஆய்வுக்காக அனுப்ப வேண்டும்.மேலும், விபரங்களுக்கு தோட்டக்கலை உதவி இயக்குனர்கள், வட்டார வேளாண்மை விரிவாக்க மைய பிரதிநிதிகளை நேரில் அணுகலாம். இவ்வாறு, மோகன் கூறினார்.

**கொடைக்கானலில் ரோஜா தோட்டம் தோட்டக்கலை கமிஷனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 12,2012,21:46 IST

கொடைக்கானல் : கொடைக்கானல் புதிதாக ரோஜா தோட்டம் அமையவுள்ள இடத்தை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை கமிஷனர் சந்தோஷ்பாபு ஆய்வு செய்தார்.
இங்குள்ள, சீதோஷ்ண நிலைக்கு ஏற்றபடி, பிரையண்ட், செட்டியார் பூங்காவில் சாதாரண, வீரீய ஓட்டு ரக ரோஜாக்கள் பூக்கின்றன.
இதில் "ஹெபினெஸ், ஹப்பாய் மான்சூமா, பர்ஸ்ரெட், சூப்பர் ஸ்டார்' என மொத்தம் 752 வகையான ரோஜாக்கள் மலர்கின்றன.
புதிதாக அப்சர்வேட்டரி பழப்பண்ணையில் ரோஜா தோட்டம் அமைக்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் அறிவித்தார். ரூபாய் மூன்று கோடி நிதி ஒதுக்கப்பட்டது.
புதிதாக தோட்டம் அமைய உள்ள இடத்தை தோட்டக்கலைத்துறை கமிஷனர் சந்தோஷ்பாபு ஆய்வு செய்தார்.
துணைஇயக்குனர்கள் கந்தசாமி, ராஜாமுகம்மதுஆகியோர் உடனிருந்தனர்.

---

தினகரன்

சேலம் வேளாண் கூட்டுறவு சங்கத்தில் `1 கோடிக்கு மஞ்சள் விற்பனை கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நேரம்:2012-07-12 10:59:26

சேலம், : சேலம் பள்ளப்பட்டியில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் செவ்வாய் தோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், வாழப்பாடி, தொப்பக்காடு, தெடாவூர், குறிச்சி, நாரணம்பாளையம், தர்மபுரி, பொம்மிடி, பெரம்பலூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த 415 விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை ஏலத்துக்கு

கொண்டு வந்திருந்தனர். மொத்தம் 2800 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது.
ஈரோடு, சேலம், ஆத்தூர் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். விரலி ரக மஞ்சள் குவிண்டாலுக்கு ` 4600 முதல் ` 7028 வரையிலும், குண்டு ரக மஞ்சள் ` 4990 முதல் ` 5619 வரையிலும், பனங்காலி ரக மஞ்சள் ` 8100 முதல் ` 8569 வரையிலும் ஏலம் போனது. நேற்று ஒரே நாளில் மொத்தம் ` 1 கோடிக்கு மஞ்சள் ஏலம் போயுள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் தனி அலுவலர் முத்துராஜ் கூறுகையில், நடப்பு ஆண்டில் இதுவரை நடந்த ஏலத்தில், நேற்று (முன்தினம்) முதன்முதலாக `1 கோடிக்கு மஞ்சள் ஏலம் போயுள்ளது. கடந்த வாரம் நடந்த ஏலத்தைக் காட்டிலும் இம்முறை விரலி ரக மஞ்சளுக்கு `500, குண்டு ரக மஞ்சளுக்கு `300, பனங்காலிக்கு `500 வரையிலும் கூடுதல் விலை கிடைத்துள்ளது.

மழைக்காலத்தில் மஞ்சள் விலை குறையும் என்பதால், விவசாயிகள் இதுவரை இருப்பு வைத்திருந்த மஞ்சளை அதிகளவில் ஏலத்துக்கு கொண்டு வரத்துவங்கி உள்ளனர். அடுத்த ஏலத்தில் இதைக் காட்டிலும் அதிகளவில் மஞ்சள் மூட்டைகள் வரத்து இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏலம் முடிந்ததும் விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணப்பட்டுவாடா செய்யப்பட்டது, என்றார்.

## மீன், நண்டு, இறால் வளர்ப்பு பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-07-12 10:26:20

காரைக்கால்: காரைக்கால் ராஜிவ்காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு பயிற்சி மையத்தில் நேற்று பள்ளி மாணவர்களுக்கு மீன், நண்டு, இறால் வளர்ப்பு சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது.

இம்மையத்தில் மீனவர்கள், சுய உதவிக்குழுவினர், கல்லூரி மாணவர்களுக்கு, கொடுவா மீன், கல் நண்டு, கடல் விரால் மற்றும் இறால் வளர்ப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, பள்ளி மாணவர்களிடம் எதிர்காலத்தில் சுய தொழிலை ஊக்கப்படுத்தவும், இளம் பருவத்திலேயே தொழிற்கல்வி மற்றும் பொது அறிவை வளர்த்துக்கொள்ளவும் இந்த சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது.காரைக்கால் உதவி திட்ட மேலாளர் கணேசன் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் சுந்தரேசன், முனைவர் தினகரன், கங்காதரன், சுரேஷ் ஆகியோர் பயிற்சியளித்தனர்.

## பருத்தி உற்பத்தியை அதிகரிக்க நவீன சாகுபடி முறை அறிமுகம்

பதிவு செய்த நேரம்:2012-07-12 12:02:18

திருவாடானை, : தமிழகத்தில் பருத்தி உற்பத் தியை அதிகரித்த நவீன சாகுபடி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருவதாக வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

வேளாண்துறை அதிகாரிகள் கூறியதாவது: பணப்பயிர்களில் பரு த்தி முதன்மையான இடத் தில் உள் ளது. உலகளவில் பருத்தி உற்பத்தியில் இந்தி யா இர ண்டாம் இடத்தில் உள்ளது. ஆனாலும், பருத்தி உற்பத்தி தமிழகத்தில் குறை வாகவே உள்ளது. தமிழகத் தில் உள்ள நூற்பாலைகளு க்கு ஆண்டு க்கு 70 லட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் அந்தளவிற்கு பருத்தி கிடை ப்பதில்லை. பருத்தி உற்பத் தியை அதிகரிக்க, பல நவீன சாகுபடி முறைகளை வேளாண் துறையினர் அறிமுகப்படுத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் குளிர்கால இறவை பருத்தி, மானாவாரி பருத்தி, இறவை பருத்தி, நெல் தரிசு பருத்தி என பருத்தி 4 பருவங்களில் பயிரிடப்படுகின்றன. மானா வாரி பகுதிகளுக்கு கே 10, கே 11, கேசி 2, கேசி 3, எஸ்பிபிஆர் 3, எஸ்விபிஆர் 4, எம்சியு 5, எம்சியு 12, பையூர் 1, எல்ஆர்ஏ 5166 ஆகிய ரகங்கள் சிறந்தவை என கண்டறிப்பட்டுள்ளன. விவசாயிகள் கோடை உழவு செய்யும்போது நிலத்தின் சரிவுக்கு குறுக்காக உழவு செய்யவேண்டும். இதனால் வழிந்தோடி வீணாகும் நீர் தடுக்கப்பட்டு உட்கிரகிக்கப்பட்டு விடும்.

மண்ணின் உற்பத்தித் திறனை அதிகரிக்க செய்யும்பொருட்டு, தொழுஉரம், மக்கிய குப்பை அல்லது ஆடு, மாடுகள் கிடைபோடு தல் ஆகியவற்றை முறையே செய்யவேண்டும். ஒரு ஹெக் டேருக்கு 12.5 டன் தொழு உரம் இடுவதால், மண்ணின் தன்மை கெட்டுவிடாமல் பருத்தியின் விளைச்சலை அதிகமாக பெறலாம். பொது பரிந்துரையின் படி ரகங்களுக்கு தகுந்தவாறு உரம் இடவேண்டும்.

பரிந்துரை செய்யப்பட்ட தழைச்சத்தில் பாதி யையும், முழு அளவு மணிச்சத்தையும் அடியுரமாக இடவேண்டும். நுண்ணூ ட்ட கலவை 12.5 கிலோவை, 40 கிலோ மணலுடன் கலந்து விதைச்சாலில் தூவ வேண்டும். மண் ஈரம் காக் கும் பொருட்டு, மண் போர் வை அமைத்து பயிர் வறட்சியில் வாடுவதை தடுக்க லாம். பருத்தியில் அதிகப்படியான நீராவி போக்கை கட்டுப்படுத்த பராபின் என்ற மெழுகு பொருளை 1 சதவீதம் என்ற அளவில் இலைகளில் தெளித்து நீராவி போக்கைக் குறைக்கலாம்.

காய்கள் நன்றாக வெடி த்து வரும்போது, ஒரு வார இடைவெளியில் பருத்தி அறுவடை செய்யவேண் டாம். காலை 11 மணிக்குள் பருத்தி அறுவடைய முடி த்து விடவேண்டும். நன்கு வெடித்த பருத்தியை ஒரு குவியலாகவும், பூச்சிகளி னால் சேதமடைந்த பருத்தி யை தனி குவியலாகவும் வைக்கவேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு வேளாண் அலுவல கங்களை விவசாயிகள் அணுகலாம். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தினத் தந்தி DAILY THANTHI

## நிர்ணயித்த இலக்கை எட்டுவது கடினம் தேயிலை உற்பத்தி 2% குறையும்



*சுதானுகா கோசல்*

*கொல்கத்தா*

*நடப்பு 2012–ஆம் ஆண்டில் மொத்தம் 10 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் தேயிலை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இந்த இலக்கை எட்டுவது கடினம் என்று கூறப்படுகிறது. 2011–ஆம் ஆண்டில் 98.80 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் உற்பத்தி 2 சதவீதம் (1.80 கோடி கிலோ) குறைந்து 97 கோடி கிலோவாக குறையும் என தற்போதைய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.*

*அசாம் மாநிலம்*

*அசாம் மாநிலத்தில் நடப்பு ஆண்டில் தேயிலை உற்பத்தி 5–10 சதவீதம் சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனவரி–மே மாத காலத்தில் நிலவிய வறட்சியான பருவநிலையும், ஜூன் மாதத்தில் பெய்த கனமழையுமே இதற்கு காரணமாகும். சென்ற ஆண்டில் அசாம் மாநிலம் 50.87 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்தது. இது, நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் 50 சதவீதத்திற்கும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் ஏப்ரல் வரையிலான நான்கு மாதங்களில் அங்கு உற்பத்தி 22 சதவீதம் குறைந்து 5.02 கோடி கிலோவாக சரிந்துள்ளது.*

*சர்வதேச அளவில் இந்தியா தேயிலை உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. நம் நாட்டில் ஆர்தோடக்ஸ் மற்றும் சி.டி.சி. ஆகிய இரண்டு ரக தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது. எகிப்து, பாகிஸ்தான், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சி.டி.சி. ரக தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது. உயர்தர ஆர்தோடக்ஸ் தேயிலை ஈராக், ஈரான், ரஷ்யா ஆகிய*

நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

ஈரான் நாட்டு இறக்குமதியாளர்கள் தேயிலைக்கான தொகையை செலுத்துவதில் தாமதம் செய்வார்கள் என்ற எதிர்பார்ப்பு காரணமாக பலர் ஆர்தோடக்ஸ் ரக தேயிலை சாகுபடியை கைவிட்டு சி.டி.சி. தேயிலை உற்பத்தியில் கவனம் செலுத்தி வருகின்றனர். இதனால் ஆர்தோடக்ஸ் ஏற்றுமதி கடுமையாக சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விலை குறையாது

பருவநிலை கோளாறுகளால் தேயிலை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் உற்பத்தி சரிவடைந்துள்ளது. எனவே உலக தேயிலை உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. பொதுவாக 5 முதல் 10 சதவீதம் வரை உற்பத்தி குறைந்தால் அது எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படுத்தாது. இந்நிலையில் நடப்பு ஆண்டில் தேயிலை விலை குறைய வாய்ப்பில்லை என மேக்லியோடு ரஸ்ஸல் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

## உலக வேளாண் உற்பத்தி 60% அதிகரிக்க வேண்டும் ஐ.நா. அமைப்பு கருத்து

உலக அளவில், 2050–ஆம் ஆண்டுக்குள் வேளாண் உற்பத்தி 60 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளன. இதன்படி, கடந்த 2007–ஆம் ஆண்டு முதல் உணவு தானியங்கள் மற்றும் இறைச்சி உற்பத்தி ஆண்டுக்கு 20 கோடி டன் அதிகரிக்க வேண்டும்.

கடந்த 20–30 ஆண்டுகளில் உலக வேளாண் உற்பத்தி ஆண்டுக்கு சராசரியாக 2 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்து வந்துள்ளது. ஆனால் இந்த வளர்ச்சி விகிதம் அடுத்த பத்து ஆண்டுகளில் 1.7 சதவீதமாக குறையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவு உற்பத்தியில் ஏற்படும் வளர்ச்சிக்கு பெரும்பாலும் வளர்ந்து வரும் நாடுகள்தான் பின்னணியாக இருக்கும். அதே சமயம் கடந்த சில ஆண்டுகளைக் காட்டிலும் இந்த வளர்ச்சி வேகம் குறைந்தே காணப்படும் என தெரிகிறது. என்றாலும் எதிர்பார்க்கும் மக்கள்தொகை அதிகரிப்பை விஞ்சி வேளாண் உற்பத்தி வளர்ச்சி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஒரு நபர் வாயிலான வேளாண் உற்பத்தி ஆண்டுக்கு 0.7 சதவீதம் என்ற அளவில் தொடர் வளர்ச்சி அடையும் என்பதே இதன் பொருளாகும்.